**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09032025-8596

Volume: 9

Issue: 3

Month: January

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 16.10.2024

Accepted: 20.12.2024

Published: 01.01.2025

Citation:
Kalavathi, V. "Textual Variations in Akananoor Hymns." *Shanlax International Journal of Tamil Research*, vol. 9, no. 3, 2025, pp. 11–15.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i3.8596

*Corresponding Author:
skalavathivgmail.com

CC BY SA

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Textual Variations in Akananoor Hymns

**V. Kalavathi**
*Assistant Professor & Head, Department of Tamil*
*Rajapalayam Rajukkal College, Rajapalayam*
*https://orcid.org/0000-0003-2062-3072*

**Abstract**
*This article is written focusing on the textual differences found in songs 131, 133, 135 of Akananoor in Sangam literature, in the context where various text authors have found text in countless songs found in Tamil literature. Is the word transition correctly positioned as in the original text? The readers of the song will have a doubt. In order to understand the correct meaning of the word found in the original text, the different opinions of the speakers are included in this article.*

***Keywords:*** *Rain Eye, Ovyam Vallar, 'Guruumair', Vadamin, Ganiyaram, Vangaipoo*

**References**

1. Puliurgesikan. Manimekalai. Chennai: Gowra Publishing House, 2019.

# அகநானூற்றுப் பாடல்களில் உரை வேறுபாடுகள்

***முனைவர் வி. கலாவதி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்
இராஜபாளையம் இராஜுக்கள் கல்லூரி, இராஜபாளையம்

***ஆய்வுச் சுருக்கம்***

*பழந்தமிழ் இலக்கியங்கள் என்று கூறப்படும் சங்க இலக்கியங்களில் ஒன்றான அகநானூற்றில் பொருள் பொதிந்த வாழ்வியல் கூறுகளும், வழக்காறுகளும், படிப்போர் மனதில் படிமங்களாக நின்று நிலைத்திருக்கும் தன்மை உடையன. ஏட்டுச் சுவடிகளில் இருந்த சங்க இலக்கியங்களைத் தொகுத்து நூலாக்கம் செய்யும் பணியைச் செய்தவர் உ.வே. சாமிநாத ஐயர், இவரின் அளப்பரியச் செயலால் பண்டைய இலக்கியங்கள் மீட்டுருவாக்கம் பெற்றுள்ளன என்பதை அவரின் "என் சரித்திரம்" என்ற நூல் வழி அறிய முடிகிறது. பாடல்களைத் தொகுத்ததோடு அல்லாமல் அவற்றிற்கு 'உரை' வகுக்கும் ஒப்பற்ற பணியையும் அவர் செய்துள்ளார். அகநானூற்றுக்கு 23 பேர் உரை எழுதியுள்ளனர். ஒவ்வொரு உரையாசிரியரின் கருத்துக்களோடு மற்ற உரையாசிரியர்களின் கருத்துக்கள் ஒற்றுமையும், வேற்றுமையும் கொண்டனவாகத் திகழ்கின்றன. இதனை மதுரை மருதன் இளநாகனார் பாடிய பாலைத்திணையின் 131 ஆம் பாடலிலும், உறையூர் மருத்துவர் தாமோதரனார் பாலைத் திணையில் பாடிய 133 ஆம் பாடலிலும், பரணர் பாடிய பாலைத்திணையில் 135 ஆம் பாடலிலும் காணலாகும் உரை வேறுபாடுகளைச் சுட்டி பாட வேறுபாட்டினால் பாடல் கருத்து மாறி உள்ளமையை உரைவளம் மூலம் தெளிவின்றி சுட்டி உரைக்கப்பட்டுள்ளமையை அறிய இக்கட்டுரை வழிவகுக்கும்.*

***முக்கியச் சொற்கள்:*** *மழைக்கண், ஓவியம் வல்லார், 'குரூஉ மயிர்', வடமின், கணையமரம், வேங்கைப்பூ*

**உரைவளம்**

சங்க காலத்தில் தமிழைக் காக்கும் பொறுப்பை மன்னர்கள் பெற்றிருந்தனர். பின் பல்லவர் காலத்தில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் தமிழ்ப்பணியை மேற்கொண்டனர். பிற்காலச் சோழர் காலத்தில் தான் பல உரையாசிரியர்கள் தோன்றித் தமிழின் காவலராய் விளங்கினர். உரையாசிரியர்களின் இடைவிடாத முயற்சியாலும் தொடர்பணியாலும் பழந்தமிழ் இலக்கியங்கள் வருங்கால சந்ததியினருக்கு உதவுகின்றன

(tamilvu.org/courses/degree/p102/p1021 /html/p1021113.htm

மேற்கண்ட **131,133,135** ஆம் பாடல்களுக்கு ராஜகோபாலார்யன், புலியூர்கேசிகன், ந.மு.வேங்கடசாமி நாட்டார், பொ.வே.சோமசுந்தரனார், நா.மீனவன், கரந்தைகவியரசு, ச.வே.சு போன்றோர் பாலை திணையில் அமைந்த **131**ஆம் பாடலுக்கும், ராஜகோபாலார்யன், ந.மு.வேங்கடசாமி நாட்டார், கரந்தை கவியரசு, புலியூர் கேசிகன், ஆ.மாணிக்கனார், நா.மீனவன் ச.வே.சு போன்றோர் பாலைத்திணையில் அமைந்த **133**ஆம் பாடலுக்கும், ராஜகோபாலார்யன், புலியூர் கேசிகன், இரா.செயபால், வ.த.இராமசுப்பிரமணியம், ந.மு.வேங்கட சாமி நாட்டார், அ. மாணிக்கனார், நா.மீனவன் போன்றோர் பாலைத்திணையில் **135**-ஆம் பாடலுக்கும் உரைக் கண்டுள்ளனர். இவர்களின் உரைகளை அடிப்படையாகக் கொண்டு மூலப்பாட வேறுபாடும், உரை வளமும் மாறியுள்ளமையையும் அதனால் ஏற்பட்டுள்ள பொருள் மாறுபாடுகளையும், சுட்டிக்காட்டி மூலப்பாடத்தை அறிதலின் அவசியத்தை அறியலாம்.

**பாடல் வரிகளில் சொற்பொருண்மை**

ஒரு சொல்லானது 'அகராதி' நோக்கில் பொருள் கொள்ள முற்படின், பல்வேறு பொருண்மைகளை நேரடியாகவும், தொடர் அமைப்புகள் இடம்பெறும் தன்மையைப் பொருத்தும் பொருள்கொள்ள நேரிடும். அவ்வகைமையின் அடிப்படையில், உரையாசிரியர்களின் எண்ணங்கள் புலப்படுத்தும் பான்மையையும் அடங்கும். அவரவருக்குத் தோன்றும் கருத்துக்களின் அடிப்படையில் உரைவளம் அமைக்கப்பட்டாலும், பாடல்பாடிய புலவரின் மூலப்பாடத்தோடு ஒப்பு நோக்கி பார்க்கும்போது, புலவரின் கருத்தியலோடு உரைவகுத்தோரின் கருத்தும் ஒப்புமை உடையதாக உள்ளதா? என்பது சிந்திக்கத்தக்கது.

**உரையாசிரியரின் கருத்து புலப்பாடு**

**யெழுதெழின் மழைக்கண் கலுழ நோய்க்கூர்ந்**
**(அகம்-பாலை-135)**

என்ற வரிகளில், 'யெழுதெழின் மழை கண்' என்ற சொல்லிற்கு, பல்வேறு உரைப் பொருள்கள் கூறப்பட்டுள்ளன. சந்தன, குங்குமச் சேற்றில் வரிக்கும் அழகினை உடைய குளிர்ந்த கண் அழ, என்று ராஜகோபாலார்யன் பொருள் கூறியுள்ளார்.

ஓவியம் வல்லார் பார்த்து எழுதுவதற்குரிய அழகிய குளிர்ந்த கண் அழ என்று ந.மு.வேங்கடசாமி நாட்டார், பொ.வே.சோமசுந்தரனார், அ.மாணிக்கனார், நா.மீனவன், இரா.செயபால், ச.வே.சு போன்றோர் உரைவகுத்துள்ளனர். இரு வேறுபட்ட பொருள்கள் காணப்படுவதால் காலத்தால் முந்தைய உரை எது? என்பதையும், மூலப் பாடத்திற்குப் பொருள் பொருந்தக்கூடிய வகையில் அமைந்துள்ள பொருளினையும், கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. மற்றொரு கருத்து யாதெனில், மரபு சார்ந்த பழக்கங்களைச் சிந்தித்து சொல்லின் பொருளினைப் பொருத்தப்பாட்டோடு கூற வேண்டிய கடப்பாடும் உள்ளது. அவ்வகையில், அக்காலத்தில் சந்தனம், குங்குமச்சேற்றை உடலில் பூசிக்கொள்ளும் பழக்கம் இருந்துள்ளது, ஆனால்,சந்தன குங்குமக் குழம்பினை கண்களில் பூசிக்கொள்ளும் பழக்கம் இருந்ததாகக் கொள்ளத்தக்க சான்றுகள் கிடைத்தில. சந்தன குழம்பு உடலில் பூசியதற்கு அகநானூற்றில்,

**ஐது விரல் அசைவளி ஆற்ற, கை பெயரா**
**(அகம்-102)**

என்ற வரிகளில் தலைவன் மார்பில் சந்தனம் பூசி இருந்தான் என்பதை தெரிவிக்கின்றது. புறநானூற்றில்,

**சாந்தமிமை மார்பின் நெடுகிவேல்**
**பாய்ந்ததென (புறம்-63)**

என்ற பாடலில் சந்தனம் பூசிய மார்பில் நெடிய வேல் பாய்ந்ததால் என்ற பொருளில் சந்தனம் மார்பில் பூசப்பட்டமையைச் சுட்டிக் காட்டுகின்றது..

**புலவு வாள் புலர் சாந்தின் (புறம்-16)**

என்ற வரிகளில் சந்தனம் பூசிய மார்பு என்ற பொருளில் காணப்படுகிறது.

ஆக, மார்பில் சந்தனம் பூசப்பட்டதற்கான சான்றுகள் அதிக அளவில் காணப்படுகின்றன.

எழுதெழின் மழைக்கண் என்பதற்கு பல்வேறு விளக்கங்கள் சுட்டப்பட்டாலும், ஓவியம் வல்லார் பார்த்து எழுதுவதற்குரிய அழகிய குளிர்ந்த கண் என்று பொருள் குறிப்பதே பொருத்தமுடையதாகும். ஏனெனில், சுட்டப்பட்டச் சொற்பொருளையும், அடிகளின் கருத்தையும் ஒப்பு நோக்கி கூறுவது சால பொருந்தும்.

**யாடு தளி ரிருப்பைக் கூடுகுவி வான்பூக்**
**(அகம்-135)**

மேற்கண்ட வரிகளில் 'வான்பூ' என்ற சொல்லினை பொருள் கொள்ளும்போது, பெரிய பூக்கள் என்ற பொருளில் ராஜகோபாலார்யன், புலியூர் கேசிகன் கூறுகின்றனர். ஆனால், வெண்மையான பூக்கள் என்று ந.மு. வேங்கடசாமி நாட்டார், பொ.வே.சோமசுந்தரனார், ஆ.மாணிக்கனார் போன்றோர் உரை கூறுகின்றனர். சங்க இலக்கியப் பாடல்கள் பெரும்பாலானவற்றில்,

'வான்பூ' என்பது வெண்மையானப் பூக்களை குறிக்கும் என்ற வகையில் காணப்படுகிறது.

**கோடு கடை கழங்கின் னறைமிசைத் தாஅங்**

**(அகம்-135)**

என்ற வரிகளில் 'கோடு கடை கழங்கு' என்ற சொல்லானது, ராஜகோபாலார்யன், புலியூர் கேசிகன், போன்றோர் உரைகள், சங்கினால் கடையப்பட்ட கழங்கு என்றும் பொருள் வகுத்துள்ளனர். ந.மு. வேங்கடசாமி நாட்டார், பொ.வே.சோமசுந்தரனார், நா.மீனவன், போன்றோர் பொருள் கூறும் போது யானை, மருப்பினால் கடைந்து செய்த கழங்கினைப் போன்று என்ற பொருள் தந்துள்ளனர். 'கோடு' என்பதை யானையின் கொம்பு அல்லது தந்தம் என்று கூறுவர். இதனை அடிப்படையாக வைத்து பொருள் கூறும்போது,யானை மருப்பினால் கடைந்து செய்த கழங்கு என்பது பொருத்தமான உரைப்பொருளாகக் கொள்ளலாம்.

பாலைத்திணையில் மருதன் இளநாகனார் பாடியுள்ள பாடலில்,

**விசும்புற நிவந்த மாத்தாளிகை**

**(அகம்-131)**

என்ற வரியில் 'மாத்தாளிகை' என்ற சொல் காணப்படுகின்றது. இச்சொல்லிற்கு இராஜகோபாலார்யன் 1920,1923 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்த பதிப்புகளில் 'மாத்தாளிகை' என்று கூறியுள்ளார். இவரே 1931 ஆம் ஆண்டு வெளியிட்ட பதிப்பில் 'மாத்தாளினை' என்று பதிப்பித்துள்ளார்.

இச்சொல்லின் பொருள் 'இதணை மரம்' என்று ராஜகோபாலாரியன், புலியூர் கேசிகன் ஆகியயோர் கூறுகின்றனர். மேற்கண்ட கருத்திலிருந்து சற்று வேறுபட்டு ந.மு. வேங்கடசாமி நாட்டார், பெ.வே. சோம சுந்தரனார், நா.மீனவன் போன்றோர் 'மாத்தாளினை' என்று பொருள் கூறியுள்ளனர். இச்சொல்லினைப் பகுத்தாராயும் போது கரிய அடியினை உடைய இகணை என்று பொருள் கொள்ளலாம். அ.மாணிக்கனார் இந்த சொல்லின் பொருள் கரிய அடிப் பகுதியை உடைய கணையமரம் என்று பதம் கூறி உள்ளார். இவ்வாறாக, மாத்தாளிகை என்ற ஒற்றைச் சொல்லிற்கு உரையாசிரியர்கள் பலரும் பலவிதக் கருத்துக்களை கூறினாலும் ப.ஆறுமுகனார் கூறிய கணையமரம் என்ற சொல்லே பொருத்தப்பாடுடையது என்பதை வரிகள் இடம்பெற்றுள்ள இடம், பொருள் நோக்கி கருத்தின் தன்மையை அறிய இயலுகின்றது.

உறையூர் மருத்துவர் தாமோதரனார் பாலைத்திணையில் பாடியுள்ள பாடலில்,

**குன்றியன்ன கண்ண குரூஉமயிர்**

**(அகம்-135)**

என்ற வரியில் 'குரூஉமயிர்' என்ற சொல்லிற்கு நன்னிறம் பொருந்திய மயிர் என்று சங்க இலக்கிய பாடல்களில் பெரும்பான்மை உரைகள் பொருள் செப்புகின்றன.

**'பசுமட குரூஉத்திரள்'** **(புறம்-32)**

என்றும்,

**'குரூஉக் களிற்று'** **(புறம்-97)**

**'குரூஉத்தழை'** **(புறம்-271)**

**'குரூஉ'** **(பதிற்றுப்பத்து-15)**

போன்ற இடங்களில் 'குரூவு' என்ற சொல்லாட்சி பயின்று வந்துள்ளது. மேற்கண்ட வரிகளின் பொருளாக 'கனம்', 'திரட்சி' என்று உரைகள் சுட்டுகின்றன. ஆனால், 'திரட்சியான மயிர்' என்ற பொருண்மையே சிறந்ததாகும் எனப் பொருள் கொள்ளலாம்.

**நன்னாள் வேங்கைவீ நன்களம் வரிப்பக்**

**(அகம்-133)**

என்ற வரியில் நன்னாள் என்பதற்கு 'மணநாள்' என்று ராஜகோபாலார்யன், புலியூர்கேசிகன், அ.மாணிக்கனார் இரா.செய பால், ச.வே. சு போன்றோர் உரை வகுத்துள்ளனர். வேங்கை மலர்கள் மலரும் காலத்தை மணம் செய்வதற்குரிய காலமாக, அக்கால மக்கள் கருதினர். ஆனால், மேற்கண்ட கருத்திற்கு இலக்கியச் சான்றுகள் கிடைத்தில. அக்கால மக்கள் நட்சத்திரங்களின் அடிப்படையில் நல்ல நாள்ளினைக் குறித்தும், கணித்தும் விழாக்களைக் கொண்டாடும் வழக்கத்தை

கொண்டோர். பரணி, மூலம் போன்ற நட்சத்திரங்கள் குறித்த கருத்துக்கள் புறநானூறு, அகநானூறு, பத்துப்பாட்டு- நெடுநல்வாடை, கலித்தொகை போன்றவற்றிலும் சிற்றிலக்கிய நூலான கலிங்கத்துபரணி போன்ற நூல்களிலும் பெருவாரியான இடங்களில் பயின்று வந்து ள்ளன என்பதை அறிய முடிகிறது.

***வடமின் போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள் (கலித்தொகை-2)***
***வடமின் புரையும் கற்பின் மடமொழி அரிவை-புறம்-102***
***விசும்பு வழங்கு மகளிருள்ளும் சிறந்த- பதிற்றுப்பத்து-31***
***செம்மீன் அனையன் நின்-பதிற்றுப்பத்து- 30***
***அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்- அகம்-141***
***அறுவர் பயந்த ஆலமர் செல்ல- திருமுருகாற்றுப்படை-255***

என்ற சொற்கள் சங்க காலத்தில் நட்சத்திரங்களின் பயன்பாடு அதனை கணிக்கும் கணியன்கள் இருந்த கருத் தினையும் சுட்டுகின்றது. நன்னாள் என்பது இவ்விடத்தில் ‘வேங்கைப்பூ’ மலரும் நாளினைக் குறிப்பதாகக் கொண்டாலும், வேங்கைப்பூ பௌர்ணமி அன்று மலரும் தன்மை உடையது என்னும் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு நன்னாள் என்ற சொல்லிற்கான உரையினை தெளிதல் வேண்டும்.

## தொகுப்புரை

அகநானூற்று பாடல்களில் காணப்படும் உரை வேறுபாடுகள் அவற்றின் பொருள் அமைவு, ஒவ்வொரு உரையாசிரியர்களுக்கும் மாறுபடும் தன்மை உடையது என்பதைச், சில பாடல்களில் மட்டும் எடுத்து இக்கட்டுரை ஆய்வு செய்துள்ளது. உரையாசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் இடையே காணப்படும் வேறுபட்ட கருத்துகளும், காலச் சூழலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள உரைக் குறிப்புகளும் உரையாசிரியர்களின் மனநிலை பொறுத்து வேறுபட்ட தன்மை உடையவனாக அமைந்துள்ளன என்பதை மேற்கண்ட அகநானூற்று பாடல்களின் உரையாசிரியர்களின் கருத்து வழி இக்கட்டுரை ஆய்வு செய்துள்ளது.

## குறிப்புகள்

1. தமிழ் இணையக்கல்விக்கழகம்
2. அகநானூறு- -135
3. அகநானூறு-102
4. புறநானூறு-63
5. புறநானூறு-16
6. அகநானூறு-135
7. அகநானூறு-135
8. அகநானூறு-131
9. அகநானூறு-135
10. புறநானூறு-32
11. புறநானூறு-97
12. புறநானூறு-271
13. பதிற்றுப்பத்து-15
14. அகநானூறு-133
15. கலித்தொகை-
16. புறநானூறு-102
17. பதிற்றுப்பத்து-31
18. பதிற்றுப்பத்து-30
19. அகநானூற்று-141
20. திருமுருகாற்றுப்படை-255

## துணைநூற்ப்பட்டியல்

1. அகநானூறு, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை,
2. கலித்தொகை- நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை
3. தமிழ் இணையக்கல்விக்கழகம் https://www.tamilvu.org/
4. திருமுருகாற்றுப்படை, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை
5. பதிற்றுப்பத்து, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை
6. புறநானூறு, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை